# K NKESANTHURAI DISTRICT S OUT BRANCH ASSOCIATION

## 7th ANNIVERSARY SOUVENIR

## 7வது ஆண்டு நிறைவுச் சிறப்புமலர்

காங்கேசன்துறை மாவட்டச்
சாரணர் கிளைச் சங்கம்

சரவணமுத்து இராசம்மா
ஞாபகார்த்த அன்பளிப்பு

காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் நிலைச்
சங்கம் 7வது ஆண்டு நிறைவினைக்
கொண்டாடும் இவ் வேளையில்
இம் மாவட்டம்
வெள்ளி விழாவினைக் காண
வாழ்த்துகின்றோம்

செல்லப்பா இராசரத்தினம் குடும்பத்தினர்
கொல்லங்கலட்டி

காங்கேசன்துறை மாவட்டச்

# சாரணர் கிளைச் சங்கம்

# அமரர் இ. விசுவநாதன்

அவர்களின்

நினைவு தினமும்

# சாரணர் கண்காட்சியும்

# 7வது ஆண்டு நிறைவு விழாவும்

காலம்: **29-6-88** புதன்கிழமை

இடம்: மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பளை

பிரதம விருந்தினர்:

வைத்திய கலாநிதிகள்

திரு. திருமதி. ஸ்ரீகாந்த அவர்கள்

கௌரவ விருந்தினர்:

திரு. க. ஸ்ரீபாஸ்கரன் அவர்கள்

Administration

## *Kankesanthurai District Scout Branch*

1988

Patrons. **Ad. G A, Jaffna**
**D. E, Jaffna**

President: **Mr. K. C. Sivamaharajah**

Vice Presidents: **Mr. R. K. Kulasekaram**
**Mr. P. Nagaratnam**

Secretary: **Mr. N, K. Thangaratnam**

Treasurer: **Mr. S. Thuraisingam**

Badge Secretary: **Mr. N. Thayalan**

Ex. Co. Chairman: **Dr. R. S. Innasithamby**

District Commissioner: **Mr. N. Bhojan** A, L. T.

## சமர்ப்பணம்



யாழ் கண்ட B. P.

# அமரர் இரத்தினம் விசுவநாதன்

**நினைவிற்குரிய அன்னாரின் பண்புகள்:**

★ நேரத்திற்குச் சமுகமளித்தல்

★ சுறுசுறுப்பு

★ முதுமையையும், இளமையையும் மதித்தல்

தோற்றம்: 23-1-1921 மறைவு: 30-6-1987

காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் கிளைச் சங்கத்தின்
1வது மாவட்ட ஆணையாளர்

# FATIMA ELECTRICALS

## பற்றிமா எலெக்ற்றிக்கல்ஸ்



Dealers in: S-Lon Pipe & Fittings
Electrical Contractors,
Rewinding & Reparing of Electrical Goods
& Plumbing Works undertaken

## FATIMA ELECTRICAL

MAIN STREET,
PANDATERUPPU



# முகவுரை

காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் சங்கத்தின் ஆரம்பத்திற்கும், அதன் வளர்ச்சிக்கும் மூலகாரண கர்த்தாக்களுள் ஒருவன் என்ற முறையில் என் கடமையைச் செய்தல் என் பணியாகும்.

எமது மாவட்டம் **13-10-80**இல் மாவை கிராம அபிவிருத்திச் சங்க மண்டபம், கொல்லங்கலட்டியில் திரு. எஸ். ஆர். சண்முகரத்தினம் அவர்கள் தலைமையில் கூடிய அதிபர்கள், சாரணத் தலைவர்கள் கொண்ட குழுவின் மத்தியில் முன்னாள் பிரதம ஆணையாளர் திரு கேமபால இரத்தினசூரியா அவர்களால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. முன்னாள் எதிர்க் கட்சி முதல்வர் திரு அ. அமிர்தலிங்கம் அவர்களால் காரியாலயம் திறந்து வைக்கப்பட்டது. தேசிய செயலாளர் திரு. டென்சில் டி சில்வா ஆசியுரை வழங்கினார். இம் மாவட்டத்தின் வளர்ச்சியின் பெருமை அவர்களுக்குரியது.

அன்று வித்திட்ட எமது மாவட்டம் இன்று 7ஆவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடுகின்றது. இவ் வேளையில் சாரணர்கள் கல்வி வளர்ச்சிக்கு முன்னுரிமை கொடுக்க செயற்திட்டம் வகுத்த இம் மாவட்ட விழாவிற்கு வைத்திய கலாநிதிகள் திரு. திருமதி. ஸ்ரீகாந்த அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வது மிகவும் பெருமைக்குரிய விடயமாகும். சேவை எனும்போது காலம் அறிந்து செய்தல் வேண்டும். குறிப்பாக இன்று பொருளாதாரம், சுகாதாரம், கல்வி ஆகியவற்றில் எமது மாவட்டம் அதி கவனம் செலுத்தி வருகின்றது.

எமது மாவட்டம் கடந்த ஏழு ஆண்டுகளிலும் பேடன் பவல் தினம், சாரணர் பாசறை விழா, குருளைச் சாரணர் பாசறை விழா, அணித் தலைவர் பயிற்சி, அறுவர் தலைவர் பயிற்சி, கலைக்கூறு I, கலைக்கூறு II பயிற்சிகள், சாரணர் வாரம், வீதி ஒழுங்கும் கட்டுப்பாடும் பயிற்சி, முதலுதவிப் பயிற்சி என்பவற்றை முறையே திறம்பட நடத்தி வருகின்றது. இதன் காரணத்தால் எமது மாவட்டம் பயிற்சி அளிப்பதில் இலங்கையில் முன்னணியிலும். சாரணர் தொகையில் வடக்குக், கிழக்கில் முன்னணியிலும் திகழ்கின்றது.

கடந்த ஆண்டு நான்கு சாரணத் தலைவர்கள் தரு சின்னத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இதைப் போன்று மேலும் பலர் தரு சின்னத்தைப் பெறவேண்டிய பயிற்சி ஒழுங்கினை எமது மாவட்டம் மேற்கொண்டு வருகின்றது. மாவட்ட வளர்ச்சிக்கு அயராது பணியாற்றிய முன்னாள் சங்கத் தலைவர் திரு. A. மகாதேவன், தற்போதய தலைவர் திரு. சி. சிவமகாராசா முன்னாள் செயலாளர்கள் திரு K. சிவானந்தன், திரு. V. S. கணேசலிங்கம், தற்போதய செயலாளர் திரு. N. K. தங்கரத்தினம் காரியகர்த்தாக் குழுத் தலைவர் வைத்திய கலாநிதி சுகந்தன் இன்னாசித்தம்பி முன்னாள் பொருளாளர் திரு சி. கயிலைமகான் செயலாளர் சின்னம் திரு. நா. தயாளன் ஆகியோருக்கும் எமது நன்றிகளும், பாராட்டுக்களும் உரியது.

எமது மாவட்டத்தில் சாரணர்கள், குருளைச் சாரணர்கள், சாரணத் தலைவர்கள் இவ்வாண்டு புதுப் பொலிவுடன் காணப்படுகின்றனர். இதற்கு மூலகாரணமாக உதவியாற்றிய எமது முன்னாள் பிரதம ஆணையாளர் திரு T. செனிவரத்தின, தற்போதய ஆணையாளர் B. C. R. ஜெயசிங்கா தேசிய பயிற்சி ஆணையாளர் திரு. லயனல் சில்வா, தலைமை அலுவலக உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எமது விசேட நன்றிகள் உரித்தாகுக. எமக்கு வேண்டிய காலங்களில் ஆலோசனை வழங்கியும், உதவியும் வரும் மானிப்பாய், காங்கேசன் துறை, வட்டுக்கோட்டை வட்டாரக் கல்வி அதிகாரிகளுக்கும், தெல்லிப்பழை, உடுவில், சண்டிலிப்பாய், சங்கானை உதவி அரசாங்க அதிபர்களுக்கும் எமது நன்றிகள்.

இளமையில் எமது இளம் மாவட்டத்தைப் பொறுப்பேற்ற யான் முதுமையையும், இளமையையும் ஒன்று சேர்த்து என் முழு அளவிலான முயற்சியினால் என் பலம் பொருந்திய சாரணர் அறிவைக் கொண்டு இலங்கையின் சிறந்த மாவட்டமாகவும் தலைசிறந்த சாரணத் தலைவர்கள், சாரணர்களை உருவாக்கிய மாவட்டமாகவும் திகழ வைப்பேன் என்ற முழு அழவிலான நம்பிக்கை எனக்குண்டு. இப்பணி நிறைவேற தலைமை அலுவலகம், யாழ் கல்வித் திணைக்களம் எமது சங்கம் முழு அளவிலான உதவிகள் புரியும் என நம்புகின்றேன். குறிப்பாக எமது மாவட்டத்தினைச் சேர்ந்த யாழ் மாவட்ட முன்னாள் கல்விப் பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் அவர்களும் தற்போதய கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூர் அவர்களும் அளித்தும் அளித்துவரும் உதவிகளாலும் நிச்சயம் நாம் மாணவர்கள் மத்தியில் நல்லதோர் வருங்கால சமுதாயத்தை உருவாக்க முடியும். அவர்களது தலைமையில் அதிபர்கள், சாரணர் இயக்க நலன் விரும்பிகள் ஆகியோருக்கான விசேட கருத்தரங்கு இலங்கையில் சிறப்பாக நடைபெற்று வருகின்றது எனலாம். அவர்களுக்கும் எமது பாராட்டுக்களும் நன்றிகளும். திரு இ. விசுவநாதன் அவர்களின் கண்ணியமான சேவை எமது மாவட்டத்தினை வளர்ச்சிப்

பாதையில் எடுத்துச் சென்றது. எமது B. P. அவர் அமரத்துவம் அடைந்தாலும் அன்னரது பண்புகள் இவ்வுலகை விட்டு நீங்கா. அன்னரது ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

மாவட்டத்தின் வளர்ச்சியும், உயர்ச்சியும் எனது பணியின் வெற்றியும், தோல்வியும் குறிப்பாக பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், சாரணத் தலைவர்கள், சாரணர்கள், சாரணர்களது பெற்றோர்கள், சங்க உறுப்பினர்கள், நலன் விரும்பிகள் கரத்திலும் செயலிலும் தங்கியுள்ள இவ் வேளையில் தாங்கள் அனைவரும் இதுவரை எமக்களித்த ஆதரவிற்கு நன்றிகூறி, நன்றியுள்ளவனாக நிற்கின்றேன். எம் மாவட்டத்தின் பூரண வளர்ச்சிக்கு தங்கள் பூரண ஆதரவினை நாடி நிற்கின்றேன்.

சமாதான சமத்துவப் பாதையில் சிறந்ததோர் வருங்கால சமுதாயத்தை எம் மாவட்டத்தில் உருவாக்கப் பணியாற்றுவோம்

நா. போஜன் A. L. T.
(மாவட்ட ஆணையாளர்)

## குருளைச் சாரணியம்

வாக்குறுதி

என்னால் இயன்ற வரையிற் திறமையாய் எனது சமயத்திற்கும் நாட்டிற்கும் என் கடமையைச் செய்யவும், குருளைச் சாரணர் விதிகளுக்குப் பணிந்து நடக்கவும், தினமும் ஒரு நற்பணி புரியவும் நான் வாக்குறுதி அளிக்கின்றேன்.

குருளைச் சாரணர் விதி

(i) குருளைச் சாரணன்: ஆக்கேலாவுக்குப் பணிந்து நடக்கின்றான்
(ii) குருளைச் சாரணன்: தன்னை உபயோகமுள்ளவனாக்குகின்றான்
(iii) குருளைச் சாரணன்: திறம்படச் செயலாற்ற முயல்கின்றான்

யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளர்

**திரு M. M. மன்சூர் அவர்களின்**

# ஆசிச் செய்தி

---

காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் கிளைச் சங்கம் ஆரம்பமாகி இன்று 7 ஆண்டுகள் பூர்த்தியாகியதை முன்னிட்டு வெளியிடப்படும் இச் சிறப்பு மலருக்கு எனது ஆசிச் செய்தியை அனுப்புவதில் நானும் ஓர் சாரணர் இயக்க உறுப்பினன், தொண்டன் என்ற வகையில் மிகவும் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

அகில இலங்கையிலும், குறிப்பாக தமிழ்ப் பகுதிகளிலும் காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் கிளைச் சங்கம் பயிற்சி, மாவட்ட ரீதியான செயற்பாடு, சாரணர் இயக்க வளர்ச்சி (சாரணர் தொகை, குழுக்களின் தொகை என்பன) கடந்த ஓராண்டுக்குள் வெகு சிறப்பாக முன்னேற்றம் அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஊக்கத்துடன் ஆக்க பூர்வமான பணியினை ஆற்றிவரும் இக் கிளைச் சங்கம் நாட்டில் வருங்கால சமுதாயத்திற்கு பெரும் பணியாற்றும் வகையில் மாணவரை நற் பிரஜைகள் ஆக்கும் என்பது நம்பிக்கை.

நாட்டின் வளர்ச்சிக்கும், ஒருமைப்பாட்டிற்கும் உதவக்கூடிய ஓர் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றைக் கொண்ட ஓர் இயக்கம் இருக்குமாயின் அது சாரணர் இயக்கம் ஒன்றுதான். இவ் இயக்கத்தைச் சகல பாடசாலைகளிலும் ஆரம்பிப்பதன் மூலம் குறிப்பாக பாடசாலையும் வீட்டாரும் பூரண பலனை ஓர் சாரண மாணவனிடம் இருந்து பெறமுடியும்.

சாரணியம் கல்வி சம்பந்தமான ஓர் இயக்கம். மாணவரிடம் காணப்படும் விசேட ஆற்றல்களுக்கு விசேட தகுதிகாண் சின்ன முறை மூலம் சாரணியத்தில் விசேட பயிற்சி அளிக்கப்படுகின்றது. இவ் வழியில் காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் கிளைச் சங்கம் அதிபர்களுக்கான கருத்தரங்கு, ஆசிரியர்களுக்கான பயிற்சி என்பவற்றையும் ஏனைய செயற்த் திட்டங்களையும் கிரமமாக நடாத்தி சாரணிய வளர்ச்சிக்கு உதவி வருகின்றது. இப் பணியில் அயராது உழைத்து வரும் மாவட்ட ஆணையாளர் திரு நா. போஜன் உதவி மாவட்ட ஆணையாளர்கள் ஏனைய சாரணத் தலைவர்கள், பாடசாலை அதிபர்கள் சாரணர்கள் ஆகியோருக்கு எனது பாராட்டுக்கள்.

இம் மாவட்டம் சாரணியத்தின் மூலம் சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் பல்லாண்டு காலம் சிறந்த சேவையாற்றவும், மேலோங்கி வளரவும் எனது மனமார்ந்த ஆசிகள்.

# MESSAGE

**From the Sri Lanka Scout Association**

**Chief Commissioner**

## Mr. T. Seneviratne

Scouting is a worldwide movement. We Scouts in Sri Lanka are proud to belong to this unique Brotherhood which cuts across barriers of country, race, religion, colour and class to become the world's biggest voluntary youth movement.

It gives me great pleasure to send a message of good wishes on the occassion of the Sixth Annual Celebration of Kankesanthurai District Scout branch Association.

The Scout Leaders of this District have shown keeness and enthusiasm in developing scouting in schools and socities in the District. The Work of the District is so will established due to the determined efforts of Mr. N. Bhojan and Mr. R. Visuvanathan.

Scouting symbolises the virtues of simple living, Self discipline, self reliance, self less service and recognition of the principal of benevolent leader ship.

I am sure that this Association will grow year by year and be of grate service to this District and Sri Lanka.

**Sgd. T. Seneviratne**

Sri Lanka Scout Association,
65/9, Sir Chittampalam Gardiner Mawatha,
COLOMBO - 2.

# Message from the National Training Commissioner

On the occasion of the 6th Anniversary and Scout Rally of the Kankesanthurai District Scout Branch Association of the Sri Lanka Scout Association. I send to all scouts Camping Brotherly Greetings. Demonstration of good Camping with all woodcraft gadgets and pioneering structures is the best advertisement for the Scout Movement. Jamborees and Rallies of this type bring into action the 4th Scout Law, A Scout is a friend to all and a brother to every other Scout, no matter to what Country, Class or creed the other may belong.

I would have been with you personally if not for the present difficulty of travel etc.

So enjoy your Rally and be Healthy, Helpful and Happy.

**J. LIONEL SILVA**
(National Training Commissioner)

# MESSAGE

It is with great pleasure I am sending a message to the 6th Anniversary and Annual Celebrations of the Kankesanthurai District Scout Branch Association.

Being the President of this Association I have greatly noticed its functioning. The enthusiasm and the unparalleled service of the Kankesanthurai District Scout are greatly appreciated.

It is highly commendable that the Scout Head Quarters in Colombo has appreciated the K. K. S. District Scout Branch as the best in the Northern Province.

I have been informed that Mr. N. Bhojan who held the post of A. D. C. (Administration) has been appointed as our New Disctrict Commissioner. I wish him all Success.

I am very much certain that the K. K. S, District Scout Branch Association will have a better and more fortunate future under the young, energetic new District Commissioner.

My thanks and well wishes are due to the outgoing District Commissioner Mr. R. Visuvanathan who held the post since the formit an of the K. K. S. district scout Branch Association in October 1980.

J/Mallakam Hindu Mahavidyalaya,
Mallakam.

**A. Mahadevan**
L. A. President.

# MESSAGE



It is with great pleasure I send my best wishes and sincere greetings to all those assamble at the K. K. S. District Annual Scout Rally and Cub Field Day on the 19th October 1986 at Union College, Tellippalai.

I am aware of the fact that elaborate arrangements have been made to make this great event a fitting Success. All those Scouts who will be present at this Rally Day will, no doubt, have a very useful and on interesting time and carry back pleasant memories.

I take this opportunity to convey my heartiest. Congragulations to our new energetic District Commissioner Mr. N. Bhojan and all his dedicated. band of officers, and the wel wishers who have done so much of hard work towards the success of this programme.

I wish the Rally day a great Success.

'Innasithamby Valavu.
Sillalai.

**R. Suhanthan Innasithamby**
Ex. Co. Chairman

யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளர்

## திரு. இ. சுந்தரலிங்கம் அவர்களின்

# ஆசிச் செய்தி

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச்சங்கம் ஆரம்ப மாகி இன்று 6 ஆண்டுகள் பூர்த்தியாகும் வைபவத்தைக் கொண் டாடுமுகமாக வெளியிடப்படுகின்ற மலருக்கு எனது ஆசிச் செய்தியை அனுப்புவதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

அகில இலங்கையிலும் குறிப்பாக தமிழ்ப் பகுதிகளிலே காங்கேசன்துறை கிளைச்சங்கம் ஆற்றிய பல சேவைகள் அளப் பெரியன. இச்சங்கம் சாரணீய தொழிற்பாடுகளைச் சிறப்பாகச் செய்து முன்னிலையில் திகழ்வது குறிப்பிடத்தக்க வொன்றாகும். ஆக்கமும் ஊக்கமும் உறுதியான சேவையுமாற்றி வரும் இக் கிளைச்சங்கம் நாட்டில் நல்ல பிரஜைகளை உருவாக்குவதுடன் திட காத்திரமான இளஞ் சந்ததியினரையும் உருவாக்குகின்றன. குறிப்பாக காங்கேசன்துறை சாரணீய இளைஞர் சங்கம் இவ் வாண்டு பாடசாலை அதிபர்கள், சங்க அங்கத்தவர்களுக்கான விசேட பயிற்சிக் கருத்தரங்கு ஒன்றை நடாத்தியும், சாரணீய மாணவரது கல்வி நிலையில் அவர்தம் பாடசாலைகளில் பெறும் புள்ளிகளை அதிகரிக்கப்படுவதற்கான திட்டமொன்றையும் பரு வத்திற்குப் பருவம் நடைமுறைப்படுத்தி வருகின்றமை போற்று தற்குரியதாகும்.

யாழ் மாவட்டத்தில் பயிலும் சகல மாணவர்களையும் சார ணீய தொழிற்பாடுகளுக்காக ஒரு முறைமையான நிர்வாகத்தின் கீழ் செயல்பட நடவடிக்கை எடுத்திருக்கும் இவ்வேளையில் இக் கிளையின் இவ்வாறான சிறப்புமிக்க பணிக்கும் வளர்ச்சிக்கும் அய ராது உழைத்து வரும் மாவட்ட ஆணையாளரையும், ஏனைய சார ணீய தலைவர்களையும், பாடசாலை அதிபர்களையும், சாரணீய சிறுர்களையும் பாராட்டுகின்றேன்.

சாரணர் சமுதாயத்திற்கும் நாட்டுக்கும் தொடர்ந்து சேவையாற்றவும், காங்கேசன்துறை மாவட்டச் சாரணீயக் கிளைச் சங்கம் மேலோங்கி வளரவும் எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

இ. சுந்தரலிங்கம்

யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர்

## கலாநிதி சு. வித்தியானந்தன்

அவர்களின்

# ஆசிச் செய்தி

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தின் 6வது ஆண்டு விழாவினை முன்னிட்டு வெளியிடப்படும் இம் மலருக்கு ஆசிச் செய்தி அனுப்புவதில் அகமகிழ்வடைகின்றேன். இலங்கைச் சாரணர் சங்கத்தின் கிளைச் சங்கங்களில் குறிப்பாக வடக்குக், கிழக்கு மாகாணத்தில் உள்ள மாவட்டங்களில் காங்கேசன்துறை மாவட்டம் சிறந்த முறையில் இயங்கிவருகின்றது. என்பதனை அறியும்போது மிகவும் பாராட்டுகின்றேன். சாரணர்களுக்கும், சாரணத் தலைவர்களுக்கும் பயிற்சி அளிப்பதிலும், சாரண அபிவிருத்தியிலும் இம் மாவட்டம் முன்னணியில் இருப்பதனைத் தலைமை அலுவலகத் தரவுகளில் இருந்து அறியக் கூடியதாக இருந்தது.

1980ஆம் ஆண்டு அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட இம் மாவட்டம் ஆறு ஆண்டுகளில் பல அளப்பரிய சேவைகளைச் செய்துள்ளது. இதன் வளர்ச்சிக்காக அயராது உழைத்து வரும் திரு. இ. விசுவநாதன், திரு. நா. போஜன் ஆகியோரையும், உதவி மாவட்ட ஆணையாளர்கள், ஏனைய சாரணத் தலைவர்கள், பாடசாலை அதிபர்கள், சாரணர்கள் ஆகியோரையும் மனமாரப் பாராட்டுகின்றேன்.

இம் மாவட்டம் மென்மேலும் வளர்ந்து எமது நாட்டிற்கும், சமூகத்திற்கும் அளப்பரிய சேவைகள் பல ஆற்ற எல்லாம், வல்ல இறைவன் ஆசீர்வதிப்பாராகுக.

ஒப்பம்: சு. வித்தியானந்தன்

காங்கேசன்துறை மாவட்ட சாரணசங்க
மாவட்ட ஆணையாளர்

## திரு. இ. விசுவநாதன் அவர்களின்

# ஆசிச் செய்தி



காங்கேசன்துறை மாவட்ட சாரண சங்கத்தின் 6ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

அகில உலக சாரண இயக்கம் எமது சாரணத் தந்தை பேடன் பவல் பிரபுவின் தீர்க்க தரிசனத்தாலும் அனுபவத்தாலும் ஸ்தாபிக்கப்பட்டது. இச் சாரணீயம் 80 வயதை எட்டி வீறுநடை போடுகிறது. 20 இளைஞருடன், பிறவுன்சி தீவில் தொடங்கப்பட்ட சாரணீயம் இன்று உலகளாவி ஏறத்தாழ 150 நாடுகளில் 17 கோடி சாரணர்கள் அங்கம் வகிக்கிறார்கள். சாரணர் களின் கொள்கை சமுதாயத்திற்கு தொண்டாற்ற எப்போதும் தயாராக இருப்பதுவே.

தேக ஆரோக்கியம், சுத்தமான பழக்க வழக்கங்கள், உலக சமாதானம், நம்பிக்கை, நல்ல எண்ணம், சகோதர தத்துவம் என்பவற்றிற்கு சாரணீயம் ஓர் எடுத்துக்காட்டு. தூய பழக்க வழக்கங்கள், பயனுள்ள தேர்ச்சி, சமய ஒழுக்கம், கடமை, கட்டுப் பாடு, என்பவற்றில் ஒரு சாரணன் தேர்ச்சியடைகிறான்.

ஆகவே எமது இளைஞர்களை அறிவுள்ள சிந்தனையாளர்க ளாக்கி, நாட்டிற்கு சேவை செய்து சமுதாயத்தின் நற்பணியில் ஈடுபடுத்துகிறது. சாரணீயம், இனம், சமயம், வகுப்பு, என்ப வற்றிற்கு அப்பாற்பட்டது சாரணீயம். ஒரு சாரணன் தனது கௌரவத்திற்கு களங்கம் ஏற்படாவண்ணம் சுய கட்டுப்பாட்டு டன், சுயநலமற்றவனாக தன் கடமைகளை நேர்மையாய் நிறை வேற்றுவான்.


ஆகவே சாரணர்கள்தான் உலகின் சிறந்த சிற்பிகள். அதற்கு மக்கள்தான் ஒத்துழைப்புக் கொடுத்து சாரணீயத்தை மென் மேலும் வளரச் செய்யவேண்டும்.

"இன்று சாரணன் என்றும் சாரணன்." என்பதை மறவா தீர்கள்.

ஒப்பம்: இ. விசுவநாதன்

'சுந்தர்ஸன்'
இறக்குமதி செய்யப்பட்ட நவீன மின்சார உபகரணங்கள்
நவீன தூங்கு லாம்புகள், சுவர் லாம்புகள்,
மின்சார நீர் இறைக்கும் இயந்திரங்கள், விசிறிகள்,
அடுப்புகள், எஸ்லோன் பைப்புகள்,
உபகரணங்கள், சுவர் மணிக்கூடுகள்
மொத்தமாகவும் சில்லறையாகவும் சகாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
(வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு)
'சுந்தர்ஸன்', மத்திய சந்தை, மானிப்பாய்

# எங்கள் ஸ்தாபகர்




சாரணீயத்தந்தை ரொபேர்ட் ஸ்ரீவின்சன் சிமித் பேடன் பவல் பிரபு 1857-ம் ஆண்டு மாசிமாதம் 22-ம் திகதி பிறந்தார். ஒக்ஸ்போர்ட் சர்வகலாசாலை பேராசிரியர் எவ். ஜி. பேடன்பவலி னதும் தாயார் எச். சிமித் இனதும் ஏழு பிள்ளைகளில் இவர் ஐந்தாவது பிள்ளை ஆவார். பேடன்பவலின் மூன்ருவது வயதில் தகப்பனூர் இறந்தார். தாயாரின் பாதுகாப்பில் கஷ்டஜீவனத்து டன் வாழ்ந்து வந்தனர். குடும்ப ஒற்றுமை இவர்களை மேலோங் கச் செய்தது (அன்பு). கல்வியிற் குன்றியவராக பேடன்பவல் இருந்த பொழுதிலும் சித்திரம் வரைதல், பாசறை வாசம் வெட்டவெளி வாழ்க்கை, படகு ஓட்டல், பாடல், நடிப்பு ஆகியவற்றில் வல்லுனராக இருந்தார். 1870 இல் சட்டட்கவுஸ் கல்லூரியில் உபகாரச் சம்பளம்பெற்று கல்விகற்ருர்.

19-ம் வயதில் பட்டப்படிப்பை முடித்து இராணுவத்தில் சேர்ந்து இவர் முதலில் இந்தியாவிற்கு குதிரைப்படை உப தள பதியாக நியமனம் பெற்றுச்சென்று 25 வது வயதில் தளபதி யாக பதவி உயர்வு பெற்ருர்.

மிருக வேட்டையில் மிகவும் வல்லுனர். 1899-ம் ஆண்டு ஆபிரிக்க சுதேசிகட்கு எதிராக நடாத்திய போரில் தனது திற மையைக் காட்டினூர். இவரது திறமையைக்கண்ட சுதேசிகள்

இவரை "இம்பீசா" என அழைத்தனர். "என்றும் துயில் கொள்ளாத நோய்" என்பது இதன் கருத்து ஆகும். 1899-ம் ஆண்டு உபதளகர்த்தா பதவிக்கு உயர்த்தப்பட்டார். 42-வது வயதில் ஆபிரிக்காவிலுள்ள "மேப்கிங்" நகரில் சிறுபடையுடன் இருக்கும்போது எதிரிகளால் முற்றுகையிடப்பட்ட போது சிறுவர்களின் உதவியுடன் ஏழு மாதங்களுக்கு உதவிப் படை வரும் வரை அந்நகரை தனது சிறுபடையுடன் பாதுகாத்து வந்தார். இதனால் இவருக்கு மேஜர் ஜெனரல் பதவி வழங்கப்பட்டது. இக் காலத்தில் சிறுவர்களின் பங்களிப்பை நன்கு அவதானித்த பேடன்பவல் சிறுவர்கள் துணிகர வாழ்க்கைக்கு உகந்தவரென அறிந்தார். 1901-ம் ஆண்டு தனது தாய்நாடான இங்கிலாந்திற்குச் சென்றார். அங்கு அவர் எழுதிய "சாரணியத்துக்கான துணை" என்னும் நூல் பிரசுரிக்கப்பட்டு மக்களிடம் நன்மதிப்பை பெற்றது.

1907-ம் ஆண்டு முதன்முதல் பிறவுன்சீ தீவில் 20 பேர் கொண்ட ஓர் சாரணர் பாசறையை நடாத்தி பெரும் வெற்றி கண்டார்.

1908-ம் ஆண்டு சிறுவர்களுக்கு நற்பழக்கவழக்கம், நூதன அறிவு, ஆர்வம் ஆகியவற்றை புகட்டி சிறந்த குடிமகனை ஆரோக்கியத்துடன் வாழவும், தம்மைத் தாமே பராமரித்துக் கொள்ளவும் ஆர்வத்தை அளிப்பதை குறிக்கோளாகக் கொண்டு சாரணியம் எனும் இயக்கம் விஸ்தரிக்கப்பட்டது. 1908-ம் ஆண்டு பேடன்பவல் எழுதிய இளைஞர் சாரணீயம் எனும் நூல் வெளியிடப்பட்டது. வெகுவிரைவில் இவ் இயக்கம் உலக நாடுகள் அனைத்திற்கும் பரவி அதிக அங்கத்தவரைக் கொண்ட இயக்கம் ஆக மாறியது. 1912-ம் ஆண்டு உலகெங்கிலும் உள்ள சாரண இயக்க நாடுகளுக்கு ஓர் சுற்றுப்பயணத்தை பேடன்பவல் ஆரம்பித்தார். 2-ம் உலக மகாயுத்தம் ஆரம்பித்தமையால் இது இடையே தடைப்பட்டது.

1912-ம் ஆண்டு லுலவ் சென் கிளயர் சோம்ஸ் அம்மையாரைத் திருமணம் செய்தார். இவர் உலக சாரணிகள் இயக்கத்தின் தலைவராகத் திகழ்ந்தார். சாரண இயக்கத்தின் வளர்ச்சியில் 21 வது ஆண்டில் 20 இலட்சம் சாரணர்கள் உலகெங்கும் இருந்தனர். அச்சந்தர்ப்பத்தில் ஐந்தாம் ஜோர்ஜ் மன்னர் "கில் வெல் பேடன்பவல் பிரபு" என்ற பட்டம் சூட்டி பேடன் பவலைக் கௌரவித்தார்.

1920-ம் ஆண்டு பேடன்பவல் பிரபு உலகின் பிரதம சாரணராகத் தெரிவு செய்யப்பட்டார். தனது 80 வது வயதில் தனது

சாரணியக் கலையைப் பயின்ற ஆபிரிக்க தேசத்தின் கென்யா நகரிற்குச் சென்று அங்கு வசித்துவந்தார். 1941-ம் ஆண்டு தை மாதம் 8-ம் திகதி தனது 84 வது வயதில் உலகவாழ்வை நீத்தார்.

வையத்திலே அவரது பூதவுடல் அழிந்தாலும் புகழுடல் அழியவில்லை.

ஏன் உங்கள் சிறுவன் சாரணன் ஆகவேண்டும்-

சாரணியம்.........

ஓர் பயன்மிகு ஓய்வுரே முயற்சி
சிறந்த குணவியல்புகளை உருவாக்குகின்றது.
ஓர் நற்பிரஜையாக பயிற்றுகின்றது.
ஓர் சமுதாயத்திற்கு சேவையாற்ற வழிவகுக்கின்றது
சாரணனை எதற்கும் தயாரான நிலையில் வைத்திருக்க உதவுகின்றது.
சாரணனுக்கு கௌரவ உணர்வையும், பற்றுறுதியையும் உண்டாக்குகின்றது
தன்னம்பிக்கையை வளர்க்கின்றது
நல்ல தேக ஆரோக்கியத்தை அளிக்கின்றது.
ஒருவனது விசேட ஆற்றல்களை அறிந்து செயற்பட உதவுகின்றது.

மனப்பூர்வமான மகிழ்வையும் சந்தோஷத்தையும் அளிக்கின்றது
எதிர்காலப் பாதையை வளமாக்குகின்றது.
சிறுவனை நேர்மையான மனிதனுக்குகின்றது.


**Personal Class for**
**G. C. E. (A/L)**

**Pure / Applied Maths**

Tutor: *RAVIMOHAN*

No. 74 Clock Tower Road,
JAFFNA.

**MOD TEC**
**மொட் ரெக்**

மணிக்கூடு, வானொலி ஆகிய வற்றை அனுபவமிக்கவர் மூலம் நவீன முறையில் திருத்தவும் பற்றி சார்ஜ் செய்யவும்,
தொடர்பு கொள்ளுங்கள்

நிர்வாகி, மொட் ரெக்
பிரதான வீதி, சங்கானை

## சாரணன் என்றால் யார்?

- சாரணன் வெட்டவெளி வாழ்க்கை வாழ்வதிலும், தன் சுய தேவைகளைத் தானே நிறைவேற்றுவதிலும் அனுபவமும், சகல கலைகளிலும் தேர்ச்சியுள்ளவனாகவும், உலக அனுபவம் உள்ளவனாகவும், அவதானசக்தி நிறைந்தவனாகவும் இருப்பான்

- சாரணன் தனது தொழிற்பாடுகளின் போது மிகவும் அவதானமாகவும். அறிவுடனும், அமைதியாகவும், மரியாதை யாகவும் செயற்படுவான்.

- சாரணன் சமயப்பற்று, தேசப்பற்று உடையவன். சமயக் கொள்கைகளுக்கு அமையவும் பொதுவுடமைகளைப் பேணிப் பாதுகாப்பதிலும் கண்ணியமாணவன். உடல், புத்தி கூர்மை மனநிலை கொண்டு செயற்படுவான்.

- சாரணனின் விலையுயர்ந்த பொக்கிஷம் கௌரவம். அதற்கு களங்கம் ஏற்படுவதை எள்ளளவும் விரும்பான். பிறர் நம்பிக்கைக்கு பெரிதும் மதிப்பளிப்பவன்.

- சாரணன் எவ்வித இடையூறுகள் வரினும் இன்முகத்துடன் செயற்படுவான். தன்னடக்கம் உடையவன். தீயபழக்கங்களை விரும்பான்.

- சாரணன் பிறரை நேசிப்பவன். பிறருக்கு உதவி புரிவதையே இலட்சியமாகக் கொண்டவன். மற்றச் சாரணர்களைச் சகோதரனாக நேசிப்பவன். பிராணிகளிடம் கருணையுள்ளவன்.

- சாரணன் சகல பொதுப்பணி இடங்களையும், பணிகளையும் அறிந்தவன். சேவையாற்றுகின்ற குறுகிய வழியை அறிந்தவன். ஆபத்தில் உதவுபவன். எதற்கும் தயாராயிருப்பவன்.

- சாரணன் தனக்கென்று ஓர் இலட்சியம், அறிகுறிகள் கொண்டவன். தன் செயற்பாட்டினை மற்றச் சாரணன் மட்டும் அறியத்தகு அடையாளங்கள் கொண்டவன்.

## Scout Promise

On my honour
I Promise to do my best,
To do my duty to my Religion and Country,
To Help other People at all Times,
To obey the Scout low.

## Scout Law

A Scout is
Trustworthy
Loyal
Friendly and considerate
A Brother to every other Scout
Courageous
Kind to Animals
Co-operative
Cheerful
Thrifty
Clean in thought, Word and Deed.

## சாரணர் வாக்குறுதி

என்னுற் கூடுமானவரையில்,

எனது சமயத்திற்கும், தேசத்திற்கும்
என் கடமைகளைச் செய்வேனென்றும்,
எக்காலத்திலும் பிறருக்கு உதவி செய்வேனென்றும்
சாரணர் விதிகளுக்குப் பணிந்து நடப்பேனென்றும்
நான் வாக்குறுதி அளிக்கின்றேன்

## சாரணர் விதி

சாரணன்:

நம்பத்தகுந்தவன்,
பற்றுறுதியுடையவன்,
நேசமும், மரியாதையும் உடையவன்.
மற்றெந்தச் சாரணனுக்கும் சகோதரன்,
தைரியமுள்ளவன்,
பிராணிகளின் தோழன்,
ஒத்துழைப்பவன்,
மனமகிழ்வுடையவன்,
சிக்கனமானவன்,
சொல், செயல்களில் தூய்மையானவன்.

இலங்கைச் சாரணர் சங்கம்
மாவட்டச் சாரணர் கிளைச் சங்கங்கள்

1. அக்கரைப்பற்று-கல்முனை
2. அம்பாறை
3. அநுராதபுரம்
4. அவிசாவலை
5. பதுளை
6. மட்டக்களப்பு
7. சிலாபம்
8. கொழும்பு
9. காலி
10. கம்பஹா
11. ஹிங்குராங்கொற்ற
12. ஹோமகம
13. யாழ்ப்பாணம்
14. களுத்துறை
15. கண்டி
16. கேகாலை
17. கெக்கிராவ
18. குருணாகல்
19. மன்னார்
20. மாத்தளை
21. மாத்தறை
22. மொனராகலை
23. மொரட்டுவ-பியலிந்தல
24. முல்லைத்தீவு
25. நாவலப்பிட்டி
26. நீர்கொழும்பு
27. நுவரெலியா
28. பாணந்துறை-கொரன
29. பொலநறுவை
30. புத்தளம்
31. இரத்தினபுரி
32. அம்பாந்தோட்டை
33. திருகோணமலை
34. வவுனியா
35. வத்தளை-ஜாஎல
36. வென்னப்புவ
37. காங்கேசன்துறை
38. பருத்தித்துறை
39. கிளிநொச்சி

## SCOUT CREED

I would be true, For there are those who trust me.
I would be pure, For there are those who care.
I would be strong, For there is much to suffer.
I would be brave, For there is much to dare.
I would be friend to all the foe, the friendless.
I would be giving and forget the Gifti
I would be humble, for I know my weekness.
I would look up and laugh and love and Lift.

## குருளைச் சாரணன் (CUB SCOUT)

வயது எல்லை: 7 — 11
குறிக்கோள்: "இயன்றவரையில் திறமையாய் செய்"
அங்கத்துவர் சின்னம்: மஞ்சள் சுற்றுடையது.

### குருளைச் சாரணனுக அறிந்திருக்க வேண்டியன

(1) குருளைச் சாரணர் வாக்குறுதி, விதி
(2) நிமிர்ந்து நிற்றல், இலகுவாய் நிற்றல், இடதுகை குலுக்குதல், வணக்கச் சைகை
(3) கம்பீரத் தொனி

### குருளைச் சாரணர் பயிற்சித் திட்டம்

(1) அங்கத்துவச் சின்னம்
(2) முதலாவது வெள்ளித் தாரகைச் சின்னம் (3 மாத சேவை)
(3) இரண்டாம் வெள்ளித் தாரகை (3 மாத சேவை)
(4) தங்கத் தாரகை: (i) 2ஆம் வெள்ளித் தாரகை
(ii) பின்வரும் சின்னங்களில் இரண்டும் (அவை இரு குழுவில் இருந்து எடுத்தல்)

(A) முதலுதவியாளன்
(B) தோட்டக்காரன்
(C) வழிகாட்டி அல்லது வீடு பராமரிப்பாளன் ஏனைய விசேட தகுதிகாண் சின்னங்களில் ஒன்று எடுத்தல் வேண்டும்.

### விசேட தகுதிகாண் சின்னங்கள்

22 (a) சித்திரம் வரைபவன்
(b) மெய்வல்லுனர்
(c) வாசிப்பாளன்
(i) தோட்டக்காரன்
(j) வழிகாட்டி
(k) கைப்பணியாளன்

(d) சேகரிப்பாளர்
(e) துவிச்சக்கரவண்டி ஓட்டுபவன்
(f) களிப்பூட்டுபவன்
(g) முதலுதவியாளன்
(h) நடனகாரன்
(l) வீடு பராமரிப்பாளன்
(m) அவதானிப்பாளன்
(n) சமிக்ஞை செய்பவன்
(o) விளையாட்டு வீரன்
(p) நீச்சல் வீரன்
(q) மகிழ்ச்சி மிகு குடும்பத்தவன்.

ஒரு குருளைச் சாரணன் தங்கத்தாரகைச் சின்னம் எடுத்திருந்தால் அவன் சாரணனாகி முதலாம் வகுப்புச் சின்னத்தைப் பெறும் வரை தங்கத்தாரகைச் சின்னத்தை அணியலாம். 12 1/2 வயது வரை அல்லது குருளைச் சாரணனாக இருக்கும்போது எடுத்த சின்னத்துக்கான கனிஷ்ட சாரணர் சின்னத்தைப் பெறும்வரை (12 1/2 வயதிற்கு முன்) குருளைச் சாரணனாக இருக்கும்போது எடுத்த சின்னங்களை கனிஷ்ட சாரணனாக இருக்கும்போது அணியலாம்.

முதலாம் வெள்ளித் தாரகையை எடுத்த குருளைச் சாரணர் தங்கத்தாரகைச் சின்னத்திற்கான (4) a, b, c, ஆகிய சின்னங்கள் தவிர்ந்த ஏனைய இரு சின்னங்களைமட்டும் எடுக்கலாம். 2ஆம் வெள்ளித் தாரகைச் சின்னத்தைப் பெற்றபின்னர் ஏனைய சின்னங்களை எடுக்க அனுமதிக்கப்படுவர்.


புதுப்புது டிசைன்களில்
22 கரட் தங்கத்தில்
தரமான தங்க நகைகளை
ஓடர் செய்து
பெற்றுக்கொள்ள
"கோபி கிருஷ்ண
ஜுவல்லறி"
கே. கே. எஸ். வீதி
தெல்லிப்பழை.

சகல அன்பளிப்புப்
பொருட்களுக்கும்
குடும்ப பாவனைக்குகந்த
பொருட்களையும்
மலிவான விலையில்
பெற்றுக்கொள்ள
**GRIFFTOS**
*K. K. S. Road,*
*TELLIPPALAI.*

## கனிஷ்ட சாரணன் (JUNIOR SCOUT)

வயது எல்லை: 11 — 15
குறிக்கோள்: "எதற்கும் தயாராயிரு"
இலங்கை அங்கத்துவச் சின்னம் பச்சை சுற்றுடையது.

### கனிஷ்ட சாரணனுக அறிந்திருக்க வேண்டியன

(1) சாரணர் வாக்குறுதி, விதி, வணக்கச்சைகை, கைகுலுக்குதல்
(2) தேசியகீதம், தேசியகொடி, ஏற்றுதல், இறக்குதல்
(3) சாரணிய வரலாறு அறிந்திருத்தல்
(4) இரு சாரணருடன் 50 யார் அணிவகுத்து நடத்தல்
(5) வனவியற் குறியீடுகளை அறிந்திருத்தல்
(6) கட்டுக்கள் தெரிந்திருத்தல் (நேர்கட்டு, துணிக்கட்டு, முளைத்தும்புக் குழைச்சு வளையக்கட்டு, சுருக்குக் குழைச்சு, ஒரு வளையமும், இரு ஒற்றைக் குழைச்சுகளும், கயிற்றின் நுனி குலையாது தடுக்கும் முடிச்சு)
(7) சேமிப்புக் கணக்கு ஒன்றினை நடைமுறைப்படுத்தல்

### கனிஷ்ட சாரணர் பயிற்சித்திட்டம்

(1) அங்கத்துவச் சின்னம்
(2) 2ஆம் வகுப்புச் சின்னம் (6 மாத சேவை)
(3) 1ஆம் வகுப்புச் சின்னம் (3 மாத சேவை)

[முதலாம் வகுப்புச் சின்னத்தைப் பெற்றபின் 2ஆம் வகுப்புச் சின்னம் அணிதல் ஆகாது]

(4) சாரணர் நாடா

i. 1ஆம் வகுப்புச் சின்னம்
ii. பாசறைச் செயற்பாட்டுக் குழுவில் ஓர் சின்னம் (Camp Craft Group)
iii. ஆராய்வுக் குழுவில் ஓர் சின்னம் (Explorer Group)

iv. ஏனைய நான்கு விசேட தகுதிகாண் சின்னங்கள் எடுத்தல் வேண்டும்.

2ஆம் வகுப்புச் சின்னத்தை எடுத்தபின்னர் விசேட தகுதிகாண் சின்னங்களை எடுக்கலாம் 1ஆம் வகுப்புச் சின்னத்தை எடுக்கும் வரை 6 சின்னங்கள்மட்டும் எடுக்கலாம். 6 இல் பொதுச்சேவை சின்னம் இரண்டுமட்டும் ஆகும். பயன்தரு தேர்ச்சிப் பழக்கத்தைப் பெறும்வரை சாரணர் நாடாவை அணியலாம். 16 வயது முடியும்வரை அல்லது கனிஷ்ட சாரணஞக இருக்கும்போது எடுத்த விசேட தகுதிகாண் சின்னத்திற்கான பதில் சிரேட்ட சாரணர் சின்னத்தைப் பெறும்வரை கனிஷ்ட சாரணராக இருக்கும்போது எடுத்த சின்னங்களை அணியலாம்.

---

## சிரேஷ்ட சாரணன் (Senior Scout)

வயது எல்லை: 15 — 18

குறிக்கோள்: "விலாசமாக நோக்கு"

இலங்கை அங்கத்துவச் சின்னம்: கரும் சிவப்புச் சுற்றுடையது

### சிரேஷ்ட சாரணஞக அறிந்திருக்கவேண்டியது

1. கனிஷ்ட சாரணனுக்குரிய அங்கத்துவச் சின்னம், 2-ம் வகுப்புச் சின்னங்களுக்கான பயிற்சியைப் பெற்றிருத்தல் வேண்டும்.
2. தனது வயதிற்கு ஏற்ப சாரணர் வாக்குறுதி, விதி என்பவற்றை அறிந்திருத்தல்.
3. 3 இரவுகள் வெட்டவெளி வாசம் செய்தல்.
4. சிரேஷ்ட சாரணஞக பயிற்சி அளிக்கத் தகுதியுடையவன் என்ற நிலையைச் சாரணத் தலைவருக்கு ஏற்படுத்துதல் வேண்டும்.

(குறித்த தகுதிகளையுடைய சாரணனுக்கு கரும்சிவப்பு நிறத் தோற்பட்டி அணிந்து சின்னம் சூட்டப்படும், இது 2-ம் வகுப்புச் சின்னத்தைப் பெற்றதற்கான தகுதியை உடையது ஆகும். இவர்கள் 2-ம் வகுப்புச் சின்னத்தை அணியவேண்டியதில்லை.)

## சிரேஷ்ட சாரணர் பயிற்சித் திட்டம்

1. சிரேஷ்ட சாரணர் (தோற்பட்டி) சின்னம் சூட்டல்.
2. முதலாம் வகுப்புச் சின்னம்
3. பயன்தரு தேர்ச்சிப் பதக்கம் (Efficiency Decoration)
   - I. முதலாம் வகுப்புச் சின்னம் (First Class)
   - II. வீரச் செயலுக்கான சின்னம் (Venturer)
   - III. பாசறைக் கைத்திறன் குழுவில் ஒரு சின்னம். (Camp Craft Group)
   - IV. தோட்டக்காரன் குழுவில் ஒரு சின்னம் (Farmer Group)
   - V. தோல் வார் மூலம் பதக்கம் பின்னுதல்.
4. ஜனாதிபதிச் சின்னம்
   - I. பயன்தரு தேர்ச்சிப் பதக்கம் (Efficiency Decoration)
   - II. அம்புலன்ஸ் சின்னம் (Ambulance Badge)
   - III. மூன்று சமூக சேவைச் சின்னங்கள் (Public Service Badges)
   - IV. தனது சாரணர் குறிப்புப் புத்தகத்தை தொடர்ந்து ஒரு ஆண்டு பேணிவருதல். (Log Book)
   - V. 24 மணிநேர சமூகசேவை ஆற்றியிருத்தல்

     (முதலாம் வகுப்புச் சின்னம் பெற்றபின்னர்)

     [ஜனாதிபதிச் சின்னம் பெற்றபின்னர் முதலாம் வகுப்புச் சின்னம் அணிதல் ஆகாது.]

பயன்தரு தேர்ச்சிப் பதக்கம் ஒரு திரி சாரணர் விசேட தகுதிகாண் சின்னத்தைப் பெறும்வரை அணியலாம். ஜனாதிபதிச் சின்னம் B. P. விருது பெறும்வரை அணியலாம். விசேட தகுதிகாண் சின்னங்கள் 19 வயதுவரை அல்லது ஒரு திரி சாரணர் விசேட தகுதிகாண் சின்னத்தைப் பெறும்வரை மட்டும் அணியலாம்.

## திரிசாரணர் (Rover Scout)

வயது எல்லை: 18 — 24

குறிக்கோள்: "நாம் சேவை செய்வோம்"

அங்கத்துவச் சின்னம்: சிவப்புச் சுற்றுடையது.

### 1. சேர்வுப் பரீட்சை (Admmission Test)

அ) சின்னம் சூட்டப்பட்டவராக இருத்தல் அல்லது புதியவ ராயின் சின்னம் சூட்டப்படல் வேண்டும்.

ஆ) திரிசாரணர் குழுவில் சேர்ந்து 18 வயதின் பின் 6 மாத கால ஊக்கமுள்ள சாரணராக தொழிற்பட்டு இருத்தல் வேண்டும்.

இ. முதலாம் வகுப்புச் சாரணத்துக்குரிய சாரண கைத்திறன் அனுபவம் இருத்தல் வேண்டும்.

ஈ) சாரணர் இயக்கத்தின் ஏனைய பிரிவுகளையும், குறிக்கோள் களையும், ஒழுங்குமுறைகளையும் அறிந்திருத்தல் வேண்டும்

உ) "இளைஞர் சாரணியம்" "திரிசாரணியத்தின் வெற்றி" ஆகிய நூல்களை வாசித்து அறிந்திருத்தல் வேண்டும்.

ஊ) அனுபவமிக்க சாரணரின் வழிநடத்தலின் கீழ் இயங்கு தல். இளைஞர்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளைத் தீர்த் தல், தனக்கு ஏற்படும் பிரச்சினைகளை குறிப்பாக சுமுக மாகத் தீர்க்க அறிந்திருத்தல் வேண்டும்.

எ) தனது வாழ்க்கையில் சாரணராக இருக்க விரும்புகின்றாரா என்பதனையும், சாரணர் வாக்குறுதி விதிகள் என்பவற் றிற்கு அமைய நடப்பாரா என்பதையும் அறிதல் வேண் டும்.

ஏ) வாக்குறுதி, விதி, ஆகியவற்றை விளக்கிக்கூறி இரா விழிப்பு இருந்து வாக்குறுதி, விதி ஆகியவற்றிற்கு அமைய நடப்பேனு எனத் தன்னைத்தானே பரீட்சித்து உறுதியுரை வழங்குதல் வேண்டும்.

இதன்பின்னர் திரிசாரணர் தோள்பட்டி சம்பிரதாய முறைப்படி வழங்கி சின்னம் சூட்டப்படும்.

2. பேடன்பவல்விருது (B. P. Award)

( இடதுபக்கத் தோள்பட்டியில் அணிதல் )

ஒருசின்னம் சூட்டப்பட்ட திரிசாரணன் முன்னேற்றமான பயிற்சியைப் பின்பற்றி பின்வரும் 4 சின்னங்களை எடுத்து பேடன்பவல் விருதினைப் பெறவேண்டும்.

அ) திட்டமிடல் நட்சத்திரம் (Project Star)
(வலது தோள்பட்டியில் அணிதல்)

ஆ) தேசாராய்ச்சி நட்சத்திரம் (Rambler Star)
(இடது தோள்பட்டியில் அணிதல்)

இ) சாரணர் வினைத்திறன் நட்சத்திரம் (Scout Craft Star)
(தேசாராய்ச்சி நட்சத்திரத்திற்கு மேலே இடது தோள் பட்டியில் அணிதல்)

ஈ) தலைமைதாங்கும் நட்சத்திரம் (Leader Ship Star)
(திட்டமிடல் நட்சத்திரத்திற்கு மேலே இடது தோள் பட்டியில் அனுதல்)

பேடன்பவல் விருது

மேற்குறிப்பிட்ட நான்கு நட்சத்திரங்களையும் எடுத்தவர்கள் B. P. விருதினைப் பெறலாம். மேற்படி விருதினை அணியும்போது ஏனைய நட்சத்திரங்களை அணிதல் ஆகாது திரிசாரண அங்கத்துவச் சின்னம், திரிசாரணியத்தில் சேர்ந்த 18 வயது முடிந்த சாரணனுக்குப் வழங்கப்படும்.


முருகன்
கமக் களஞ்சியம்

அம்பனை, தெல்லிப்பளை

உரவகை, கிருமிநாசினி
சைக்கிள் உதிரிப்பாகங்கள்
கதிரைகள் வாடகைக்கு

ஜனனி
எஞ்சினியேஸ்

தெல்–பண்டத்தரிப்பு வீதி,
அளவெட்டி.

கேற், கிறில், மின்சார,
ஈய ஒட்டு வேலைகள்
மோட்டார் வாகனம்,
நீர் இறைக்கும் இயந்திரம்
திருத்தல்
ஏனைய உற்பத்தி
செய்து கொடுப்பவர்கள்.

# Special Proficiency Badges

## A Public Service Group

| Junior Scout | Senior Scout |
|---|---|
| FP-33-JA- 1. Linguist | FP-S 2-SA 1. Interpreter |
| 2. Missioner | 2. Public Health |
| 3. Fire Fighter | 3. Fireman |
| 4. Signaller | 4. Leading Signaller |
| 5. Cyclist | 5. Despatchrider |
| 6. Guide | 6. Path Finder |
| 7. First Aid | 7. Ambulance |
| 8. Life Saver | 8. Rescuer |
| 9. Coxswain | 9. Pilot |
| 10. Jobman | 10. Handyman |
| | 11. Civics |
| | 12. Conservation |

## B - Camp Craft Group

| | |
|---|---|
| JB - 1. Camper | SB - 1. Campwarden |
| 2. Cook | 2. Master Cook |
| 3. Wood Craftsman | 3. Naturalist |
| 4. Pioneer | 4. Senior Pioneer |
| 5. Back Woodsman | 5. Venturer |
| | 6. Quarter Master |

## C - Education Group

| | |
|---|---|
| JC - 1. Reader | SC - 1. Bookman |
| 2. Speaker | 2. Orctor |
| 3. Scholar | 3. Senior Scholar |
| 4. Scribe | 4. Clerk |
| | 5. Typist |

## D - Sports Group

| | |
|---|---|
| JD - 1. Athlete | SD - 1. Senior Athlete |
| 2. Swimmer | 2. Master Swimmer |
| 3. Sportsman | 3. Master Sportsman |
| 4. Rider | 4. Horseman |
| | 5. Archery |

## E - Social Group

JE - 1. Penfriend

SE - 1. World Friendship
2. Organ.ser

## F - Culture Group

JF - 1. Designer
2. Music Maker
3. Actor
4. Modeller
5. Dancer

SG - 1. Artist
2. Musician
3. Play Actor
4. Sculpter
5. Folk Dancer

## G - Farmer Group

JG - 1. Woodman
2. Gardener
3. Angler
4. Smallholder
5. Herbalist

SG - 1. Forester
2. Horticulturist
3. Fisherman
4. Poultryman
5. Dairyman
6. Paddy Cultivator

## H - Explorer Group

JH - 1. Observer
2. Stalker
3. Map Maker
4. Starman
5. Weatherman
6. Explorer

SH - 1. Tracker
2. Hiker
3. Surveyor
4. Astronomer
5. Meteorologist
6. Senior Explorer
7. Archaelogist

## I - Boatman Group

JI - 1. Boatswain's Mate
2. Oarsman
3. Canoeist

SI - 1. Boatswain
2. Helmsman
3. Master Canoeist

## K - Practical Science Group

JK - 1. Wirelessman
2. Hand Worker
3. Cameraman

SK - 1. Radio Mechanic
2. Handicraftsman
3. Photographer
4. Electrician
5. Motor Mechanic

## L - Hobbies Group

JL - 1. Stamp Collector
2. Junior Collector

SL - 1. Philatelist
2. Outstanding Collector

# சாரணீயம் வாழ்க

காங்கேசன்துறை மாவட்டச் சாரணர்கள் சிறந்த
குண இயல்புகளைக் கொண்ட நற் பிரஜையாக
சமுதாயத்திற்கு சேவையாற்ற துடிநிலையில்
கம்பீரமாகத் தோற்றமளிக்கின்றனர்.
தன் நம்பிக்கையும் எதிர்கால
வாழ்க்கையை விரிவுப
டுத்துபவர்களாக
வும் காணப்படுகின்ற
னர் இவர்களது நற்சேவைக்கு
நன்றி கலந்த நல் வாழ்த்துக்கள்

அருந்தவராஜா
கௌரிதேவி


**WELCOME SERVICERS**

A. G. A.'s Office Lane,

Tellippallai

# நன்றிகள்




★ ஆசியுரை, வாழ்த்துச் செய்தி தந்துதவியவர்களுக்கு

★ விளம்பரம் தந்துதவியவர்களுக்கு

★ மலரை உருவாக்க உதவிய சாரணத் தலைவர்களுக்கு, சாரணர்களுக்கு

★ மாவட்ட வளர்ச்சிக்கு உதவிய இலங்கை சாரணர் சங்க நிர்வாகிகளுக்கு, யாழ் கல்வித் திணைக்கள அதிகாரிகளுக்கு, பாடசாலை அதிபர்களுக்கு

★ விழாச் சிறப்புற நிறைவேற உதவிய அனைவருக்கும்

★ மலரை அச்சிட்டு உதவிய சங்கானை திருமொழி அச்சகத்தினர்க்கும்

திருமொழி அச்சகம், சங்கானை.